சுருக்கம்

ஈரோடு மாவட்டம் – ஈரோடு மாநகராட்சி, சத்தி சாலையில் உள்ள கனிராவுத்தர் குளம் அருகில் புதிய பேருந்து நிலையம் அமைக்க தேவைப்படும் தனியார் நிலத்தினை 2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டத்தின் கீழ் நில எடுப்பு செய்யவும் மற்றும் பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை ரூ.102.40 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் நிருவாக அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந6) துறை

அரசாணை (நிலை) எண்.113 **நாள்: 24.06.2025**

விசுவாவசு, ஆனி–10

திருவள்ளுவர் ஆண்டு, 2056

படிக்கப்பட்டது:–

1. நில நிருவாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.எச்.2/2391354/2022, நாள் 19.05.2022.
2. மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாநகராட்சி அவர்களின் கடித ந.க.எண்.10500/ஆ1, நாள் 11.08.2022, 26.09.2022, 15.10.2022 மற்றும் 18.01.2023.
3. தங்கள் கடித ந.க.எண்.15484/2022/டிபி.2, நாள் 12.06.2023 மற்றும் 09.08.2023.
4. அரசு கடித எண்.9768/மாந6/2022–6, நாள் 04.01.2024
5. அரசு கடித எண்.9768/மாந6/2022–8, நாள் 05.03.2024.
6. நில நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண். நி.எ.VIII/2391354/ 2023, நாள் 21.05.2025.
7. நகராட்சி நிருவாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.E1/6363/ 2021, நாள் 30.05.2025.

****

ஆணை:–

ஈரோடு மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வுகாணும் வகையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.01.2022 அன்று அறிவித்ததற்கிணங்க, ஒருங்கிணைந்த போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் (Comprehensive Mobility Plan) தயாரிக்கப்பட்டு, ஈரோடு மாநகராட்சிக்கு இரண்டு பேருந்து நிலையங்கள் அமைக்க பரிந்துரை செய்யப்பட்டது. அதன்படி, சோலார் லக்காபுரம் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான 23 ஏக்கர் பரப்பளவில் ரூ.63.50 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய

Verified RealEstate™

பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

2. ஈரோடு மாவட்டம், கனிராவுத்தர் குளம் சத்தி சாலையில் மற்றொரு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு தேவையான நில எடுப்புத் தொகை மற்றும் பேருந்து கட்டுமானத்திற்காக உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.138.44 கோடி நிதி அளிக்க மாநில குழுவின் 06.10.2023 அன்று நடைபெற்ற அதன் 20வது கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

3. ஈரோடு சத்தி சாலையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், பெரியசேமூர் 'ஆ' கிராமத்தில் புல எண் 201/1 மற்றும் சிலவற்றில் 5.46.50 ஹெக்டேர் இரயத்து புன்செய் நிலத்தில் 2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டத்தின் கீழ் நில எடுப்பு செய்ய நிர்வாக அனுமதி வழங்குமாறு நில நிர்வாக ஆணையர் மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. நகராட்சி நிருவாக இயக்குநர், ஈரோடு மாநகராட்சி புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிக்காக தற்போதைய விலை வீதங்களின்படி (Current Schedule of Rates 2025–26) தோராய மதிப்பீடு ரூ.102.40 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்குமாறு மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில் பரிந்துரைத்துள்ளார். இத்திட்டச் செலவினை உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி – ரூ.95.00 கோடி; மூலதன மானிய நிதி /இயக்குதல் மற்றும் பராமரிப்பு மானிய நிதி (2025–26) – ரூ.3.00 கோடி மற்றும் மத்திய நிதிக் குழு மானியம் (2025–26) – ரூ.4.40 கோடி என்கின்ற நிதி ஆதாரங்களின் கீழ் மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இத்திட்டப்பணிக்கான நிருவாக அனுமதி வழங்குமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. அரசு, மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்குறிப்பினை கவனமான பரிசீலனைக்குப் பின்னர் ஏற்று, ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி சத்தி சாலையில் உள்ள கனிராவுத்தர் குளம் அருகில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ஏதுவாக, ஈரோடு வட்டம், பெரியசேமூர் "ஆ" கிராமம், புல எண்.201/1 முதலிய காலைகளில் 13.504 ஏக்கர் (5.46.50 ஹெக்டேர்) விஸ்தீரணமுள்ள தனியார் நிலத்தினை 2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு மற்றும் ஒளிவுமறைவின்மை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைச் சட்டத்தின் கீழ் நில எடுப்பு செய்யவும், மேலும், உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி – ரூ.95.00 கோடி; மூலதன மானிய நிதி/ இயக்குதல் மற்றும் பராமரிப்பு மானிய நிதி (2025–26) – ரூ.3.00 கோடி மற்றும் மத்திய நிதிக் குழு மானியம் (2025–26) – ரூ.4.40 கோடி என்கின்ற நிதியாதாரங்களுடன் மொத்தம் ரூ.102.40 கோடி மதிப்பீட்டில் இப்புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் ஈரோடு மாநகராட்சிக்கு நிருவாக அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை – 600 028.
நில நிருவாக ஆணையர், சென்னை – 600 005.

VerifiedRealEstate

ஆணையர், ஈரோடு மாநகராட்சி, ஈரோடு– 638 001.
மாவட்ட ஆட்சியர், ஈரோடு – 638 011.

நகல்:–

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிருவாகம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் சுற்றுசூழல், காலநிலை மாற்றம்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச் செயலர்,
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 600 009.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.தி(ம)நி.ஆ/வ.செ/அநமு–2) துறை,
சென்னை – 600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Verified RealEstate ™